வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்

தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சிறார் படைப்புகளின் பெருவெளி

**முனைவர் போ. ஜான்சன்**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -02.

jonson_ta2@mail.sjctni.edu

**ஆய்வுச்சுருக்கம்**

சிறார்களின் உலகமே தனி. அதில் பெரியவர்களுக்கு இடமில்லை. யாருடைய அறிவுரையும் அவர்களுக்குத் தேவையிருப்பதில்லை. தன் சொந்தக் கற்பனையில் தன் கனவுகளில் லயித்திருக்கும் ஒரு ஞானியைப் போல சிறார்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அங்குதான் படைப்பு பிறப்பெடுக்கிறது. உண்மையில் ஒவ்வொரு குழந்தைமைக்குள்ளும் பல்வேறு படைப்புகள் ஆழப் புதைந்துகிடக்கின்றன. அவற்றை வெளிப்படுத்த இயலா வண்ணம் பாடத்திட்டம் எனும் சுமை ஏற்றப்படுகிறது. அவற்றை இலகுவாக்கிக் கற்பனையை வளர்க்க ஏராளமான மெனக்கெடல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது அவர்களுக்கான இதழ்கள். இவ்விதழ்கள் பலவும் குழந்தைமையை வெளிக்கொணர, அவரகளின் படைப்பார்வத்தை வெளிக்கொணர முயற்சி மேற்கொண்டிருக்கிறன. என்ன அபத்தம் எனில் இதுபோன்ற இதழ்கள் இருப்பதே சிறார்களுக்குத் தெரியாது. அதனைக் களைந்து அவர்களின் எண்ணவோட்டங்களை மடைமாற்றம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதனை மனதில் ஏற்று சிறார்களுக்கான இதழ்களை இனங்கண்டு அவற்றின் உள்ளடக்கத்தினை எடுத்துக்கூறி, படைப்புப் பெருவெளியை வெளிப்படுத்துவதே இதன் முக்கியத் தேவையாக உள்ளது.

**கலைச்சொற்கள்**

சிறார்கள் – ஊடகம் – மின்னிதழ் – அறிவியல் – விளையாட்டு – பெருவெளி – சூழலியல் – மூடநம்பிக்கை - படைப்புக்கலை

**தொடக்கமாக,**

சிறார் படைப்புகளுக்கான வெளியாக இன்று திகழ்வது அவர்களுக்காக நடத்தப்படும் இதழ்கள் மட்டுமே. சிறார் இதழ்களில் வெளியாகும் படைப்புகளை அறிமுகம் செய்வதாக இது அமைகிறது. படைப்பு என்பது ஒரு கலை என்பதும் அதனைப் படைப்பவர் கலைஞராக உயர்த்தப்படுகிறார் என்பதும் கண்கூடு. கலைக்கு வயது ஒரு தடையல்ல என்பதை இன்றைய சிறார் இதழ்கள் உணர்த்துகின்றன. பல்வேறு கருத்துகளை மையமாக வைத்து உண்மையானவையாகவோ, புனைவாகவோ படைப்புகள் வெளிவருகின்றன.

சிறார்களின் படைப்புகள் அவர்களுக்குள் நிகழும் ஏதோ ஒன்றை நமக்கு எளிய முறையில் அறியத்தருபவை. கதைகளைப் போலவோ அல்லது கதைகளைத் தாண்டியோ நாம் அவர்களோடு உரையாட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டிவிடுபவை. அந்தப் படைப்புகள் கற்பனையில் விளைந்தவை என்ற தோற்றத்தைத் தந்தாலும் அவை சிறார்களின் இயல்பான வாழ்க்கையோடு நெருக்கம் கொண்டவை. எந்த நோக்கமும் இன்றிச் சுதந்திரமாக வெளிப்படும் அவர்களின் படைப்புகள் சிறார் இலக்கியத்தின் வழிகாட்டியாக உருவாகும் மதிப்பு வாய்ந்தவையாக இருக்கின்றது.

குழந்தைகளைப் பற்றிய எதார்த்தமும், புனைவும் இன்றைய சமூகத்தளங்களில் வெளிவருகின்றன. அவற்றை மிகச்சாதாரணமாகக் கடந்து செல்லும் நாம் அவற்றின் எதார்த்தத்தை, கருத்தாடலை நுணுக்கமாகப் புரிந்துகொள்ள முயல்வதில்லை. உலக அளவில்கூட சிறார்களுக்கான முன்னெடுப்புகளாக திரைவெளி, நூல்வெளி, சமூகவெளி என பரவலாக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

சிறார்களின் தன்மைகளை அறிந்துகொள்ள அவர்களோடு பழகினால் மட்டுமல்ல, அவர்களாகவே மாறினால்தான் அவர்களின் இயல்பை அறிந்துகொள்ள இயலும். அதோடு நாமும் அப்பருவத்திலிருந்துதான் வளர்ந்துவந்தோம் என்ற எண்ணம் இருப்பின் அதனை இயல்பாக நாம் பெறலாம். **“தன் இயல்பை நோக்கி நகர்ந்துசெல்லும்**

**மனிதர்களாலேதான் குழந்தைகளையும் நோக்கி நகர்ந்துசெல்ல முடியம். குழந்தைகள் தங்களுக்கென ஒரு சொந்தமொழியை உருவாக்கிப் பேசுபவர்களாக இருக்கிறார்கள். அது நமக்கு வியப்பாக இருப்பதோடு அல்லாமல் குழந்தைகள் தங்களுக்குள் எப்படி ஒன்றை உருவாக்கி வெளிபபடுத்துகிறார்கள் என்பதைச் சொல்வதாகவும் இருக்கிறது”** (குட்டி ஆகாயம் இதழ்) என்ற கருத்து நோக்கத்தக்கது.

**சிறார்களுக்கான இதழ்கள்**

இன்றைய காலக்கட்டத்தில் சிறார்களுக்கான இதழ்கள் சில வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் பல பரவலாக்கம் பெறாமலே உள்ளது. இவ்வாறான சூழலில் அந்த இதழ்கள் வெளிவரும் காலம், சூழல், அவற்றின் பேசுபொருள், படைப்புகளின் தன்மை, படைப்பாளர்கள் போன்ற பல்வேறு தளங்களில் ஆராய்ந்து அவற்றை வெளிப்படுத்தும் நோக்கோடு இந்த ஆய்வு விளங்குகிறது. இதில் குறிப்பிடப்படாத மேலும் சில இதழ்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

Balloon Juniors (பலூன் சிறார் இதழ் – ஆங்கில இதழ்)

பெரியார் பிஞ்சு

பூவுலகு மின்மினி

விஞ்ஞான துளிர்

பஞ்சு மிட்டாய்

குட்டி ஆகாயம்

புது ஊஞ்சல்

தேன்சிட்டு

போன்ற இதழ்கள் இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

Balloon Juniors _ Children Magazine

சிறார்களுக்கான இதழ்களில் பலூன் சிறார் இதழ் குறிப்பிடத்தக்கது. இவ்விதழ் குழந்தைகளின் ஆங்கில அறிவை வளர்க்கவும், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும், சிந்திக்கவும் வைக்கிறது. மொழி அறிவு மட்டுமல்லாமல் வண்ணம், விளையாட்டு, ஓரிகாமி பயிற்சி, சுற்றுச்சூழல் நலன் போன்ற பல்வேறு கருத்தாடல்கள் இதில் இடம்பெறுகின்றன. அதிலும் குறிப்பாக நாம் கூடிவாழும் சமூகத்தில் குடும்பத்தை நேசிக்கவும், உற்றார் உறவினர்கள் மீதுள்ள அன்பை வளர்க்கவும் இவ்விதழ் ஊக்கமூட்டுகிறது. ஒவ்வொரு இதழும் ஒரு கருத்தை மையமிட்டு வெளியிடப்பட்டு வருகிறது.

இவ்விதழ் நடத்தும் ஆசிரியர் குழு, குழந்தைகளைப் பற்றி அறிந்தவர்களாகவும், குழந்தைகள் நல மருத்துவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் அதன்நோக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள். “We set our Goals high on building a society that reads, thinks and leads. Our balloon magazine will enroot the essential habit of reading among the children whom are all our future leaders” (Balloon magazine) எனும் கருத்தாக்கத்தை நோக்கும்போது இவ்விதழின் தேவை புரிந்துகொள்ள இயல்கிறது.

இச்சிறார் இதழ் பல்வேறு உள்ளடக்கத்தோடு அமைகிறது. அவற்றுள், ஒரு கதையை இடைநிறுத்தி (Make a Story) அதனை முழுமையடையச் செய்வற்கான வாய்ப்பு குழந்தைகளிடம் விடப்படுகிறது. அவர்கள் தங்களுடைய கற்பனை வளத்தை வளர்த்தெடுப்பதற்கான ஒரு தளமாக இப்பகுதி அமைகிறது. அவற்றோடு ஆங்கில இலக்கணமும் விளையாட்டு முறையில் (Quiz, Word Hunt, Vowels Challenge, Mach the Words, Maths Puzzle, Find English words, Crossword) பயிற்றுவிக்கப்படுகிறது. உலக அறிவும், உலக அளவில் சாதித்த குழந்தை நட்சத்திரங்களை அறிமுகப்படுத்துவதையும் இவ்விதழ் நோக்கமாகக் கொண்டுள்ளது.

குழந்தைகளைக் கவரும் கார்ட்டூன் படங்களுடன் வரும் கதைப் பகுதிகளும் நிறைந்துள்ளன. அதேநேரம் கண்களை உறுத்தாத எழுத்துருக்களும், அதற்கேற்றவாறு வண்ணப்படங்களும் நிறைந்த இதழாக வெளிவருகிறது. குழந்தைகளின் மனம் கவர்ந்த

காற்று ஊதப்பட்ட பலூன் போலவே செய்திகள் நிரம்பிய இந்த இதழும் முழுக்க மனம் கவர்ந்ததாக இருக்கிறது.

**பெரியார் பிஞ்சு**

பெயருக்கு ஏற்றார்போல பிஞ்சுகளின் நெஞ்சங்களை நெகிழச்செய்யும் இதழாக இது வெளிவந்துகொண்டிருக்கிறது. திராவிடர் கழகத்தால் வெளியிடப்படும் இந்த இதழ் முழுக்க பகுத்தறிவை மட்டுமே பேசுகிறது. பெரியாரிய சிந்தாந்தங்களைச் சிறார்களும் அறிந்துகொள்ளும் நோக்கத்தோடு இந்த இதழ் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 25 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்திகளைப் பரப்பும் இவ்விதழ் இளம் வயது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான இதழாக உள்ளது.

மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துச் சிந்திக்க வைக்கிறது இவ்விதழ். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்ப்பது தேவையானது என்பதும் அவ்வாறு ஆராய்ந்தால்தான் அதில் உள்ள உண்மை விளங்கிக்கொள்ள முடியும் என்பதும் இவ்விதழின் அடிப்படை நோக்கமாக உள்ளது. அறிவியல் உலகில் உள்ள நாம் இன்றைக்கு வழங்கிவரும் மூடநம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டு பின்னோக்கிச் செல்கிறோம். அவற்றைக் களைந்து முன்னோக்கி நடைபயில விழைகிறது இவ்விதழ். பல்வேறு தொடர்கதைகளும், அறிவியல் வளர்ச்சி குறித்த கட்டுரைகளும், உலகலாவிய கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல்களும், ஆக்கப்பூர்வமான செய்திகளும், உலகத் திரைப்படம் குறித்த பார்வைகளும், ஆங்கில அறிவை வளர்க்கும் தொடர்களும் இடம்பெறுகின்றன.

எந்தக் கூற்றை யார் கூறினாலும் அதனைக் காரணம் இல்லாமல் ஏற்காதீர்கள் என்பதையும், உலக நாடுகளின் தன்மை, வளம் போன்ற செய்திகளையும், சிறுகதைகள், படக்கதைகள், குழந்தைகளின் வண்ணத்தீட்டல்களும், குழந்தைப் பாடல்களும் என இதழ் வடிவமைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. பெரியாரின் கருத்துகள் பிஞ்சுகளின் உள்ளத்தில் ஆழப் பதியும் நோக்குடன் செயல்படும் இதுபோன்ற இதழ்கள் இன்றைய வளரும் தலைமுறைக்குத் தேவையான ஒன்றாக அமைந்துள்ளது.

**பூவுலகு மின்மினி**

சிறார்களுக்கான சுற்றுச்சூழல் மாத இதழாக வெளிவரும் இவ்விதழ் ஆண்டுக்குப் பத்து இதழ்கள் மட்டுமே வெளிவருகின்றது. ஏப்ரல், மே மாதங்களில் இதழ்கள் வெளிவருவது இல்லை. இந்த இதழைப் பூவுலகின் நண்பர்கள் அமைப்பு வெளியிடுகிறது.

இவ்விதழில் விறுவிறுப்பான கதைகள், வண்ணப்படங்கள், அறிவுத் தெளிவுக்கும், சிந்தனைக்கும் ஏற்ற செய்திகள் இடம்பெறுகின்றன. அதோடு பூவுலகின் நண்பர்களின் செயல்பாடுகளை இவ்விதழின் வழிச் சிறார்கள் அறிந்துகொள்ள ஏதுவாகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வே நமக்கும் நம்மைச் சார்ந்துள்ள விலங்குகள், பறவைகளுக்கு ஏற்றது என்பதை இந்த இதழ்கள் நமக்கு எடுத்துரைக்கிறது. பறவை, விலங்கு, பூச்சி என பலதரப்பட்ட செய்திகள் இவ்விதழில் விரவிக்கிடக்கின்றன.

சிறார்களின் சந்தேகங்களுக்கு விடையளிப்பதாகவும், சிறார்களோடு இணைந்த பயணங்களைக் கட்டுரைகளாகவும், பயன்மிக்க சுருக்கத் தகவல்களைப் பெட்டிச் செய்திகளாகவும் வெளியிடுகின்றது. வலைப்பக்கம் எனும் பகுதியில் இன்றைய இணைய உலகில் சிறார்களுக்கு ஏற்ற சில வலைப்பக்கங்களை எடுத்துரைக்கும் இதழாக இது அமைகிறது.

அவற்றுள்,http://kidspast.com/,http://www.ancientegypt.co.uk/pyramids/home.html என்ற இணையப்பக்கங்கள் அறிமுகம் செய்யப்படுகிறது. இதுபோன்று ஒவ்வொரு இதழிலும் வெவ்வேறு இணையப்பக்கங்கள் குழந்தைகளுக்காக அறிமுகம் செய்யப்படுகிறது. இவ்வாறான வலைப்பக்கங்கள் குழந்தைகளுக்கானவை என எடுத்துக்காட்டப்படுவதால் குறிப்பிட்ட அந்த வலைப்பக்கங்களுக்குச் சென்று தங்களுக்குத் தேவையான செய்திகளைப் பெற உறுதுணையாக இருக்கிறது.

வியப்பு மிகுந்த பிறமொழிகளில் வெளிவந்த பல்வேறு கதைகளைத் தமிழாக்கம் செய்தும் வெளியிடுகிறது இவ்விதழ். அதனால் பல்வேறு நாட்டில் குழந்தைகளுக்காக வழங்கப்பட்டு வரும் கதைகளை அறிந்துகொள்ள இது பேருதவி புரிகிறது. அதோடு சிறுசிறு விளையாட்டுகளும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உதவுவதாக அமைகிறது. இதன்மூலம் இயற்கை சார்ந்ததே மனித வாழ்வு என்பதைப் பகிர்ந்தளிக்கும் ஓர் அறிவுக் களஞ்சியமாக பொங்கிநிறைகிறது பூவுலகு.

**விஞ்ஞான துளிர்**

விஞ்ஞான துளிர் என்ற இதழில் பெயரிலேயே அதன் உள்ளடக்கம் விளங்கிக்கொள்ள முடிகிறது. முழுக்க அறிவியல் செய்திகளால் நிரப்பப்பட்டுள்ள இவ்விதழ் படிக்கும் சிறார்களின் அறிவியல் அறிவை வளர்க்க பேருதவி செய்கிறது. இதன்மூலம் பாடத்திட்டத்தைத் தாண்டி அறிவியலின் ஆற்றலையும், அதில் நிறைந்துள்ள உண்மைகளையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

இவ்விதழில் உள்ள ஒவ்வோரு செய்திகளும் அறிவியல் அணுகுமுறையோடு கையாளப்பட்டுள்ளது. சிறார்களின் வினாக்களுக்கு அறிவியல் முறையில் பதில் கூறுவதாகவும் அமைந்துள்ளது. அறிவியல் ரீதியிலான கதைகள், விளையாட்டுகள், துணுக்குச் செய்திகள் போன்றவையும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு விளையாட்டிலும் உள்ள அறிவியல் கருத்துகள் எடுத்தியம்பப்படுகின்றன. விலங்குகள், பறவைகள், குறித்த செய்திகளும் அவற்றின் வாழிடங்கள் குறித்த தகவல்களும் கதை வடிவில் அவைகளே நம்மிடம் கூறுவதாக அமைந்துள்ளன. அதோடு எந்தவொரு விலங்கையோ பறவையோ எடுத்துக்கொண்டாலும் அதில் உள்ள இனங்கள் குறித்தும் தெளிவாக முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக, தேன்கூடு ஏன் அறுகோண வடிவத்தில் இருக்கிறது? அதற்கும் தேனீக்களுக்கும் என்ன தொடர்பு? போன்றனவும், விலங்கினங்களின் காலடித்தடத்தைக் கொண்டு அவற்றை இனங்காண இயலும் என்ற செய்தியும் இவ்விதழில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தேசிய அறிவியல் நாளில் தமிழகத்தின் ஏதேனும் ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து அங்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தோடு இணைந்து துளிர் வாசகர் திருவிழாவினை ஆண்டுதோறும் நடத்திவருகிறது. அவ்வகையில் திருச்சி தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் மார்ச் 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. உங்கள் ஊரில் உள்ள பள்ளிகளிலும் இதுபோன்ற நிகழ்வுகளை நடத்த அவர்களிடம் தொடர்பு கொண்டு தெரிவித்தால் அதனை நடத்தித்தருவார்கள் என்பது கூடுதல் செய்தி.

விளக்கக் காட்சிக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு படமும் வண்ணங்களுடன் சிறார்களை ஈர்க்கும் வண்ணம் இருப்பதும் சிறப்பு. துளிர்விடும் விஞ்ஞானம் இவ்விதழில் பரிணமிக்கிறது.

**பஞ்சுமிட்டாய்**

பஞ்சுமிட்டாய் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான ஒரு திண்பண்டம். அதேபோல் இவ்விதழும் அவர்களுக்கு நெருக்கமானதாக அமைகிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இணைய இதழாகவும் இது வெளிவருகிறது. பயன்மிக்க கட்டுரைகள், கருத்துகள், கதைகள், பாடல்கள், விளையாட்டுகள், படக்கதைகள், புத்தக அறிமுகம் என அனைத்தும் கொண்டு விளங்கும் இவ்விதழ் காலாண்டு இதழாக வெளியாகிக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு இதழும் ஒரு மாறுபட்ட அட்டைப் படத்துடன் வெளிவருகிறது. அதிலும் முன், பின் என இரு புறங்களிலும் குழந்தைகளால் வரையப்பட்ட வண்ணமிகு ஓவியங்கள் இவ்விதழை அலங்கரிக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் சிறார்களுக்கான படைப்பாளர்களின் படைப்புகளுக்கே கூட அவர்களின் ஓவியங்கள் அழகு சேர்க்கின்றன. சில இதழ்களில் கதைகளைச் சிறார்களே சொல்லுவதாகவும் அவர்களின் படைப்புகளும் இடம்பெறுகின்றன.

சிறார் படைப்பாளர்களை அவர்களின் பள்ளிகளுக்கே சென்று சிறுசிறு தொடர்புகள் ஏற்படுத்தி அவர்களிடமிருந்து பெற்று இவ்விதழில் வெளியிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமல்லாமல் '**கதைப்பெட்டி**' என்று பல்வேறு இடங்களில் குறிப்பாகப் புத்தகக் காட்சிகளில் வைத்து அதில் சேகரிக்கப்பட்ட கதைகளையும் இவ்விதழ் வெளியிட்டு இளம் படைப்பாளர்களை இனங்கண்டு வருகிறது.

ஒவ்வொரு இதழ் வெளிவரும்போதும் அடுத்த இதழின் நோக்கம், அது எங்கிருந்து ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்ற செய்திகள் வெளியாகின்றன. சிறார்களுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களாக வளர்ந்துவிட்ட சிறார்களுக்கும் (பெரியவர்கள்) கூட்டங்களை நடத்திச் சிறார் இலக்கிய வட்டத்தை, கலை, இலக்கியம், குழந்தை வளர்ப்பு போன்ற தலைப்புகளில் உரையாடலையும் நிகழ்த்தி வருகிறது.

**குட்டி ஆகாயம்**

பெயர்தான் குட்டி ஆகாயம். ஆனால் இந்த இதழின் உள்ளடக்கத்தில் பரந்துவிரிந்து கிடக்கின்ற பேரண்டம். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைகளும் இந்த ஆகாயத்தில் நட்சத்திரங்களாக மிளிர்கிறார்கள். சிறார்களின் மனநிலைக்கு ஏற்ப

பல்வேறு வடிவங்களில் பல்வேறு சிறப்பிதழ்களாக வெளிவருகிறது. இது காலாண்டு இதழாக வெளியாகிக்கொண்டிருக்கிறது.

இதழ் வடிவமைப்பும், அதன் நேர்த்தியும் ஒவ்வொரு இதழ் வெளிவரும்போதும் அது ஏதோவொரு சிறப்பைக் கொண்டிருப்பதாகவும் அமைகிறது. இந்த மெனக்கெடல் பாராட்டப்படவேண்டியது. அதோடு முக்கியமான ஒரு செய்தி என்னவெனில், இவ்விதழை குழந்தைகளே நடத்துகிறார்கள் என்பது நோக்கத்தக்கது. இவ்விதழின் ஆசிரியர் குழுவில் **சின்னசாமி (பன்னிரண்டாம் வகுப்பு), நிலா (பத்தாம் வகுப்பு), சஹானா (ஏழாம் வகுப்பு)** என இச்சிறார்களே இயங்கிவருகிறார்கள். எந்தவொரு சிறார் இதழுக்கும் இல்லாத தனித்த அடையாளம் இந்தக் குட்டி ஆகாயத்திற்கு உள்ளது எனில் மிகையில்லை.

இதுவரை பல்வேறு சிறப்பிதழ்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள், பயண இதழ், கூர்நோக்கு இல்லச் சிறுவர்களின் சிறப்பிதழ், ரஷ்ய சிறார் இலக்கியச் சிறப்பிதழ், கதை சிறப்பிதழ், கதைசொல்லி சிறப்பிதழ், சிறார் விளையாட்டுச் சிறப்பிதழ் என வகைவகையான இதழ்கள் முளைத்துக்கொண்டே செல்கிறது. **'கதைகள் எத்தனை ஆயிரம் முறை எத்தனை ஆயிரம் வருடங்கள் சொல்லப்பட்டபோதும் அதற்கு வயதே ஆவதில்லை. பதிலாகக் கதை இன்று பிறந்த செடியைப் போல தனியாக அதிசயமும், ஈரமும் கொண்டிருக்கிறது'** (முருகபூபதி, குட்டி ஆகாயம், இதழ் 4) என்ற கருத்து ஏற்கத்தக்கது.

வண்ணங்கள் நிறைந்த இதழாக வெளிவரும் குட்டி ஆகாயம் சிறார்களின் எண்ணவோட்டங்களைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. குறிப்பாக, சிறார் விளையாட்டுச் சிறப்பிதழ் அதன் முன்னுரையில் கூறும்போது, **'விளையாட்டு நிறைந்த உலகில் ஐந்துநிமிடங்கள் கூட விளையாட முடியாதவர்கள் உண்டு'** என்கிறது. விளையாட்டு குழந்தைகளுக்கு எந்தளவு தேவையானது என்பதும் அவற்றைத் தொலைத்துவிட்டு இன்று முடங்கிக்கிடக்கும் குழந்தைகளுக்கு விளையாட்டினை அறிமுகம் செய்வதாய் இவ்விதழ் அமைகிறது. அவ்விதழ் குறிப்பிடும் விளையாட்டுகள் பின்வருமாறு, பூக்குதிரை (சொல்விளையாட்டு), ஒளிந்துகொண்ட வார்த்தை (மொழி விளையாட்டு), எண்ணா? வார்த்தையா? (கதை விளையாட்டு), பின்னங்கள் (கணித விளையாட்டு), ஒரு கல் பாட்டு (பாடல் விளையாட்டு), வட்டம் பிடித்தல் (மைதான விளையாட்டு), நடிப்போ நடிப்பு

(நாடக விளையாட்டு), கோடு, புள்ளி கிறுக்கல் (ஓவிய விளையாட்டு) என விளையாட்டுகளைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறது. அதோடு அந்த விளையாட்டுகளை எவ்வாறு விளையாட வேண்டும் என்ற விதிமுறைகளையும் ஒவ்வொரு அட்டைப்படமாக (Flash Card) எடுத்தியம்புகிறது இந்த சிறப்பிதழ். குழந்தைகளின் விரிந்த ஆர்வமாகிய ஆகாயத்தைச் சுருக்கி நம்கையில் தவழவிட்டிருக்கிறது குட்டி ஆகாயம் இதழ்.

**புது ஊஞ்சல்**

நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான மாதம் இருமுறை இதழாக தமிழ்நாட்டு அரசு பள்ளிக்கல்வித்துறையின் மூலம் வெளியிடப்படும் இதழ்தான் புது ஊஞ்சல். இவ்விதழ் வடிவமைப்பில் செய்தித்தாளை ஒத்திருந்தாலும் தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் வண்ணமயமான, குழந்தைகளின் கவனத்தினை ஈர்க்கும் வண்ணப் படங்கள் பெரிதாக அச்சிடப்பட்டு வெளிவருகிறது. அதிலும் குழந்தைக் கவிஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு இடையில் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் படைப்புகளும் வெளிவருவது நோக்கத்தக்கது.

தன்னுடைய படைப்பு வெளிவரும் இதழை நோக்கும் மாணவர் தம்முடைய ஆர்வத்தை மேலும் வளர்ப்பதற்கும், மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் உறுதுணையாக அமையும். கதைகள் யார் மனத்தையும் புண்படுத்தாமல் குழந்தைகளின் பாடத்திட்டத்தைத் தாண்டி அமைந்திருப்பது கூடுதல் சிறப்பாகும்.

சிறார்களுக்கான படக்கதைகளோடு வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தேவையான அறிவுரையும், பல்வேறு விளையாட்டுகளும், தமிழகத்தில் உள்ள சுற்றுலாத்தலங்கள், வரலாற்றுச் சிறப்பிடங்கள் குறித்த அறிமுகமும், இருமொழி பயிற்சியும், ஆங்கில இலக்கணமும் என பல்சுவை பகுதியாகப் புது ஊஞ்சல் வெளிவருகிறது. இது அரசின் தலையாய பங்களிப்பாக அமைந்துள்ளது.

**தேன்சிட்டு**

ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கான மாதம் இருமுறை வெளிவரும் இதழாக தேன்சிட்டு இதழ் அமைந்துள்ளது. இந்த இதழும்

தமிழ்நாட்டரசின் பள்ளிக்கல்வித்துறை வெளியீடாக வருகிறது. உலக அறிவுக்குத் தமிழ்ச்சாளரம் எனும் நோக்கோடு வெளியிடப்படுகிறது.

மாணவர்கள் அரசு சார்பில் சென்றுவந்த அயலகப் பயணம் பற்றிய செய்திகள், கதைகள், விளையாட்டுகள், கவிதைகள், மாணவர்களின் படைப்புகள் என பலவும் நிறைந்துள்ளன. இருமொழிக் கொள்கையுடன் விளங்கும் அரசு என்பதை இதழிலும் காட்டியுள்ளது நோக்கத்தக்கது. பாடுவோம், கதை, இப்படித்தான் இயங்குகிறது, பயணம், ஒரு கதை இருமொழி, அறிவோம் ஆயிரம், செய்து பாருங்கள், மகிழ்ச்சி அரங்கம், மாணவர் படைப்புகள், உலகச் சிறுகதை, மாணவர் படைப்பு, இயற்கையை நேசி, கலைக்களம், படக்கதை, பெரியோர் வாழ்விலே, உணவு, வரலாற்றில் இன்று எனப் பல்வேறு பகுதிகளைக் கொண்டு வண்ணப்படங்களோடு வெளிவருகிறது இந்த இதழ். இன்றைய இளம் சிறார்களே நாளைய தலைமுறைக்கு வழிகாட்டி என்பதனை இவ்விதழ்கள் எடுத்தியம்புகின்றன. அரசின் முயற்சி வரவேற்கத்தக்கது.

**இறுதியாக,**

சிறார்கள் எப்போதும் சிறப்புப் பயிற்சிகளாலும், நவீன வசதிகளாலும், பெரியவர்களைக் கவனிப்பதாலும் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள் என நினைக்க இயலாது. அவர்களின் அகவளர்ச்சி மலைநதியின் பாதையைப்போல், பறவைகளின் வழித்தடத்தைப் போல் தன்னிச்சையானது. அவர்களின் சுதந்திரமான வெளிப்பாடுகளைக் கவனிக்கத் துவங்கினால் இந்த உலகில் எதையும் மலர்ச்சியான ஒரு சொந்த அணுகுமுறையில் அவர்கள் செய்து வருவதை நம்மால் உணரமுடியும். புதுமலர் போன்ற அவர்களின் மொழியை, கோடுகளை, வண்ணங்களைப் பதிவு செய்வதோடு இந்தச் சமூகத்தை அவர்கள் உள்வாங்கி வருவதையும் பதிவு செய்வதே இதன் நோக்கம். ஒவ்வொரு இதழும் குழந்தைகளுக்கானது மட்டுமல்ல. குழந்தைகளின் உலகத்தைப் புரிந்துகொள்ள நினைக்கும் சிறியோராய் இருந்து வளர்ந்துவந்துள்ள பெரியோர்களுக்காகவும் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுக்குத் துணைநின்ற இதழ்கள்**

- **குட்டி ஆகாயம்**, சின்னசாமி, நிலா, சஹானா (சிறார் ஆசிரியர் குழு), சுந்தராபுரம், கோவை

- **தேன்சிட்டு**, செ. அமுதவல்லி (ஆசிரியர்), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், கல்லூரிச் சாலை, சென்னை
- **பஞ்சுமிட்டாய்**, பிரபு (ஆசிரியர்), பஞ்சுமிட்டாய் சிறார் குழு, மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்
- **புது ஊஞ்சல்**, செ. அமுதவல்லி (ஆசிரியர்), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், கல்லூரிச் சாலை, சென்னை
- **பூவுலகு மின்மினி**, கோ. சுந்தர்ராஜன் (ஆசிரியர்) மற்றும் பலர், விருகம்பாக்கம், சென்னை
- **பெரியார் பிஞ்சு**, கி. வீரமணி (நிறுவனர் - ஆசிரியர்), முரசு நெடுமாறன் (சிறப்பாசிரியர்), வேப்பேரி, சென்னை
- **விஞ்ஞான துளிர்**, ஆர். ராமானுஜம் (ஆசிரியர்) மற்றும் பலர், அண்ணாசாலை, சென்னை
- **Balloon Junior Magazine**, V.M. Mohammed Basheer (Editor), South Ukkadam, Coimbatore